 ISBN 978-93-5288-634-0

# பாரதியின் பாஞ்சாலி சபதமும் பாரதமும்



**முனைவர் க.கலாவதி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்க்கல்வி நிறுவனம்,
கோவை – 641 043.

சுப்பிரமண்ய பாரதியை நினைத்திட்டாலும்
சுதந்திரத்தின் ஆவேசம் சுருக்கென் றேறும்
இப்பிரபஞ்சம் முழுதும்நமக் கினமாய் எண்ணும்
'இந்தியன்நான்' என்றிடும்நல் இறுமாப்பு உண்டாம்
அடிமைப் படுகுழியில் வீழ்ந்தோம் - வெறும்
ஆரிசில் புழுக்களெனத் தாழ்ந்தோம்
கொடுமை கண்டுமனம் கொதித்தான் - கவி
கொட்டி வீரியத்தை விதைத்தான்
அவனைப் பாடி களிப்போம் பாட்டாலே புகழ்மாலை.

தமிழ் மொழியில் எத்தனையோ வகை இலக்கியங்கள் தோன்றினாலும் இதிகாசங்கள் தனி இடத்தைப் பெற்றுள்ளன. இராமாயணமும், மகாபாரதமும் தமிழ்மொழியின் வளங்களையெல்லாம் அள்ளித்தரும் கருவூலமாக விளங்குகின்றன. இவற்றில் வியாசரால் இயற்றப்பட்ட மகாபாரதத்தையொட்டிப் பெருந்தேவனார், வில்லிப்புத்தூரார், நல்லாப்பிள்ளை போன்றோர் பாரதம் பாடியிருப்பினும் பாரதத்தையே மூலநூலாகக் கொண்டு கதைபொதிந்த பாட்டாக 'பாஞ்சாலி சபதம்' என்னும் காவியத்தைப் படைத்துள்ளான் பாரதி.

இருபதாம் நூற்றாண்டில் பாரதியாரால் இயற்றப்பட்ட காவியமே பாஞ்சாலிசபதம் என்னும் சிறு காப்பியமாகும். இக்காப்பியம், வில்லிபாரதத்தில் சூதுபோர் சருக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது ஆகும். பாஞ்சாலிசபதம் என்னும் தேசிய இலக்கியமானது, பெண் விடுதலையையும், நாட்டு விடுதலை வேட்கையுணர்வையும் ஒருங்கே தருவது ஆகும். பாரதத்தில் இடம்பெற்ற சபா பருவநிகழ்ச்சியை மையமாகக் கொண்டு பாஞ்சாலிசபதம் தோன்றியது. துரியோதனன் தனக்கிழைத்த இன்னல்களின் உச்சநிலையில் திரௌபதி சபதம் செய்கின்றாள். இவ்வுணர்ச்சி மிகுந்த சூழலைத் தம் பாடுபொருளாகக் கொண்டு பாரதியார் பாஞ்சாலி சபதம் என்னும் இக்காப்பியத்தை இயற்றியுள்ளார்.

## பாஞ்சாலி சபதம் தோன்றிய நிலை

பாரதியார் வாழ்ந்த காலம் ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்ட காலம், மக்கள் அனைவரும் துயில் கொண்டு விழிக்க வழியின்றித் தவித்த பாரத தேசம் ஆங்கிலேயன் கையிலே சிக்குண்டு தவித்துக் கொண்டிருந்த காலம். பாரதியின் மனக்கண்முன் ஒருகண்ணில் புறப்போர் நடத்தும் வீரகாவியமான மகாபாரதம் தோன்றியது. மறுகண்ணில் ஆங்கிலேயரின் கையில் அகப்பட்டுத் தவிக்கும் பாரததேசம் தோன்றியது. இவ்வாறு ஒரு கண்ணில் பாஞ்சலி

ISBN 978-93-5288-634-0

தேவியும் மறுகணிணில் பாரத தேவியும் மாறி மாறி வந்து நிற்க அவருடைய பேனா முனை பெண் விடுதலையையும், விடுதலை வேட்கையுணர்வையும் ஒருங்கு தரும் பாஞ்சாலி சபதம் என்னும் ஒரு தேசிய இலக்கியத்தைப் படைத்துத் தந்தது.

பாரதக் கதை என்பதால், அதனை அப்படியே மீண்டும் கூறவேண்டும் என்ற பொருளில் பாரதி எழுதவில்லை. இங்கு பாரதி தன் தாய்நாட்டு விடுதலை என்னும் அடிக்கருத்தை மனத்தில் இருத்தியே இக்காவியத்தைப் படைத்துள்ளார்.

மானம் சிறிதென்று எண்ணி வாழ்வு பெரிதென்று எண்ணும் நடிப்புச் சுதேசிகளையும், மாய்மாலக்காரர்களையும் பாரதி அம்பலப்படுத்தினார். தனக்கு எத்தனை கஷ்டங்கள் நேர்ந்த போதிலும் தனது கொள்கைப் பிடிப்பையும், கோட்பாடுகளையும் கைவிடவில்லை. நாட்டின் புதிய விழிப்போடு ஒட்டி வளர்ந்த ஒற்றைக் கவிஞனாகப் பாரதி விளங்கினான்.

**பாஞ்சாலிசபதம் எனப்பெயரிடக் காரணம்**

சூதுசருக்கத்தில் வீமன், அர்ச்சுனன் முதலியோர் சபதம் செய்கின்றனர். ஆனால் பாரதி அர்ச்சுனன் சபதம் என்றோ வீமன் சபதம் என்றோ பெயரிடவில்லை. பாஞ்சாலி சபதம் என்றுதான் பெயரிட்டுள்ளார். காரணம் வீமன், அர்ச்சுனன், தருமன், நகுலன், சகாதேவன் என்ற பாண்டவர்களுக்கு ஏற்பட்ட அவமானத்தைவிட திரௌபதியின் நிலை மிகவும் இரங்கத்தக்கதாகும். கற்றோரும் சான்றோரும் குழுமியுள்ள அவையிலே ஒரு பெண் மானபங்கப்படுத்தப் பெறும் போது யாரும் தட்டிக் கேட்க முன்வரவில்லை. நாட்டில் அநீதியும், அநியாயமும், அதர்மமும் நிலவி, மக்களும் கைகொடுக்காத நிலையில் நம்மை மீறிய ஒரு சக்தி கை கொடுக்கும் என்பதனைத் தன்னால் மெய்ப்பித்துக் காட்ட முடியும் என்று கண்ணனைச் சரணடைந்து வெற்றியும் காண்கிறாள். இத்தகு அவமானம் அடைந்த திரௌபதி எவ்வளவு மானமும் உறுதியும் வீரமும் திண்மையுமுடையவளாக இருப்பாள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. காளிதேவியின் மீது நம்பிக்கை கொண்ட பாரதி திரௌபதியை அவளின் வடிவமாகவே கண்டதன் விளைவாலே பாஞ்சாலிசபதம் எனப் பெயரிட்டுள்ளார்.

தமிழ் மொழியில் எத்தனையோ வகை இலக்கியங்கள் தோன்றினாலும் இதிகாசங்கள் தனி இடத்தைப் பெற்றுள்ளன. இராமாயணமும், மகாபாரதமும் தமிழ்மொழியின் வளங்களையெல்லாம் அள்ளித்தரும் கருவூலமாக விளங்குகின்றன. இவற்றில் வியாசரால் இயற்றப்பட்ட மகாபாரதத்தையொட்டிப் பெருந்தேவனார், வில்லிப்புத்தூரார், நல்லாப்பிள்ளை போன்றோர் பாரதம் பாடியிருப்பினும் பாரதியார் பாரதத்தையே மூலநூலாகக் கொண்டு கதைபொதிந்த பாட்டாக 'பாஞ்சாலி சபதம்' என்னும் காவியத்தைப் படைத்துள்ளார்.

**பாஞ்சாலி சபதம் தமிழ்க்காப்பிய அமைப்பு முறையைத் தழுவியது**

தலைவனைத் தன்னிகரில்லாதவனாகப் படைத்து. அவனை மனித இயல்பிற்கேற்ற வகையில் கற்பவர் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைப்பதில்தான் கவிஞனின் திறம் இருக்கிறது என்பதை பாரதி நிரூபித்திருக்கிறான்.

பாஞ்சாலி சபதத்தில் தருமனின் பண்பு மிக உயர்ந்ததாகச் சித்திரிக்கப்படுகிறது. அறத்தைக் காக்கும் பேராற்றல் படைத்த வீரனாக, அன்பும், அருளும் உடைய நெஞ்சினனாக, வாய்மையினின்றும் பிறழாதவனாக, அமைதியே உருவானவனாக அவன் விளங்குகிறான். தருமனின் இயல்புகளைத் தாமே கூறும் முறையிலும், பிறபாத்திரங்கள் கூறும் முறையிலும்

 ISBN 978-93-5288-634-0

அவன் கூற்று வாயிலாகவும் செயல் வாயிலாகவும் விளக்குகிறார். பாரதி தருமனை 'அற மன்னவன்' என்று புகழ்ந்து கூறுகின்றார். விதுரன் பாண்டவரை விருந்திற்கு அழைத்த பின்,

**விந்தை பொருந்திய மண்டபத் தும்மை**
**வேய்யபுன் சூது களித்திடச் செய்யும்**
**மந்திர மொன்றும் மனத்திடைக் கொண்டான்**
**வன்ம மிதுவும் நுமக்கறி வித்தேன்** (பாகம்.1: 125)

என்று தான் தூதுவந்ததற்கான உண்மைக் காரணத்தையும் எடுத்துக் கூறுகிறான். தருமன் உடனே,

**தந்தையும் வரப்பணித்தான் - சிறு**
**தந்தையும் தூது வந்ததை உரைத்தான்**
**சிந்தை யொன் றினிஇல்லை – எது**
**சேரினும் நலமெனத் தெளிந்து விட்டேன்**
**முந்தையச் சிலை ராமன் - செய்த**
**முடிவினை நம்மவர்மறப்பதுவோ?**
**நோந்தது செய்யமாட்டோம் - பழ**
**நூலினுக்கிணங்கிய நெறி செல்வோம்** (பாகம்.1: 131)

என்று அத்தினாபுரம் செல்வதற்கு முடிவுசெய்து விடுகின்றான். தமிபியர் தடுத்துக் கூறியதையும் கேளாது, பெரியோரின் சொற்படி நடக்க வேண்டுமெனும் முடிவோடும், விதியின் ஆற்றலில் மிகுந்த நம்பிக்கையோடும் அத்தினாபுரம் செல்ல உடன்படுகிறான். எத்தகு இடையூறு நேரிட்டபோதிலும் தருமனின் மனம் கலங்குவதில்லை. நாடிழந்து தம்பியரை இழந்து மனைவியை இழந்த பின்னுங் கூட அவன் பொறுமையினின்றும், அறத்தினின்றும் வழுவாத நிலையிலேயே நடந்து கொள்கிறான். இறுதி வரையிலும் அவன் அமைதியை இழந்து விடாமலே இருக்கிறான்.

**நூல் விளக்கிய செய்கைகள்**

**அஞ்சும் நோன்பினோன்** (பாகம்.1: 71)
**'பழியில்லாத தருமன்'** (பாகம்.1: 188)
**'புண்ணியமிக்க தருமன்'** (பாகம்.2: 27)
**'அறத்தண்ணல்'** (பாகம்.2: 31)
**'சாமி தருமன் புவிக்கே'** (பாகம்.2: 104)

என்றெல்லாம் கவிஞன் புகழ்ந்த போதிலும், பிற பாத்திரங்கள் குறிப்பாகத் தலைவனின் பகைவர் அவனைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை அவர்கள் வாயிலாகக் கவிஞன் காட்டுகிறான்.

தருமனின் வெற்றியில் மிகுந்த பொறாமை கொண்டிருப்பவன் துரியோதனன். தருமன் நடத்திய ராஜசூய யாகத்தின் அவன் பெற்ற பெருமையும், செல்வ வளமும், அவன் உள்ளத்தில் ஏற்கனவே கனன்று கொண்டிருந்த பொறாமைக் கனலைப் பெருந்தீயாக்கியது. தன் பகைவன் என்ற முறையில் துரியோதனன் தருமனின் வெற்றிக்குரிய காரணங்களை நன்கு எண்ணிப் பார்த்துள்ளான். பகைவனின் திறமையைக் குறைத்து மதிப்பிடுவது மனித இயல்பு தான். எனினும் தருமனிடமுள்ள சிறு குறையையும், துரியோதனன் நன்கு அறியமுடியுமாதலால் அவன் கூற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டும். தருமனின் புகழ், கொடை, அறிவு, அறிவியல்பு இவற்றைத் தயக்கமின்றி ஏற்றுக்கொள்கிறான் துரியோதனன்.

 ISBN 978-93-5288-634-0

**சாரமறிந்த யுதிட்டிரன் கேட்டு வியந்ததும் - நல்ல**
**தங்க மழை பொழிந்து ஆங்கவர்க்கே தமிழ் தந்ததும்**
**நல் விருந்து செயலில் அளவற்ற பொன் செலவிட்டதும்** (பாகம்.1: 45-46)
**"நீதித்தருமன் ------------"** (பாகம்.1: 104)

என்ற பாடலடிகள் வழி தருமனின் நல்லியல்புகளைப் பேசுகின்றான் துரியோதனன். வானுயர்ந்த இப்புகழுக்குத் தருமன் தகுதியுடையவன்தானா? என்ற ஐயமும், அதனால் அவன் மனத்தெழுந்த சினமுமே துரியோதனனிடம் மேலோங்கி நின்றன.

தருமன் தம்பியர் தோள்வலியாலும், கண்ணனின் துணையாலுமே உயர்வடைந்தானேயன்றி உண்மையில், தலைமை பெறுமளவிற்கு அவன் வீரமுடையவனல்லன் என்னும் கருத்துத் துரியோதனனின் எண்ணத்தில் இடம் பெற்றிருக்கிறது.

தருமனை மிக உயர்ந்தவனாகப் படைத்த பாரதி, அவனை உலகியல்பிற்கேற்ற வகையில் சாதாரண மனிதனாகவும் சிற்சில இடங்களில் அமைத்துக் காட்டுகிறான். தருமன் தம்பியர் சகாதேவனையும், நகுலனையும் சூதிற் பணயமாக வைத்திழக்கிறான். இழந்த பிறகு என்ன புன்மை செய்தோம்? என்றெண்ணி வருந்துகிறான். சகுனி,

**வேறொரு தாயிற் பிறந்தவர் – வைக்கத்**
**தகுவரென் றிந்தச் சிறுவரை – வைத்துத்**
**தாயத்திலே இழந் திட்டனை**
**திண்ணிய வீமனும் பார்த்தனும் - குந்தி**
**தேவியின் மக்களுனை யொத்தே – நின்னிற்**
**கண்ணிய மிக்கவர் என்றவர் – தமைக்**
**என்ன புன்மை செய்தோம் என எண்ணினான் - அவ்வெண்ணம்**
**மிகுவதன் முன்பு சகுனியும் - ஐய**
**காட்டுதற் கஞ்சினை போலும் நீ** (பாகம்.1: 230-231)

என்று கூறியதும், பொறுமையே வடிவாக அமைந்த தருமன், மனித இயல்பிற்கேற்றபடி, துண்ணென வெஞ்சினம் எய்தியதைப் பாரதி காட்டுகிறன். எத்தகைய துன்பம் நேரிட்ட போதிலும் அது விதி வழிப்படியே நடக்கிறது என்பதை நன்குணர்ந்து அறத்தின் வழிச்செல்லும் தருமன், சகுனி இவ்வாறு கூறியதும் சினமெய்தி விசயனைப் பணயமாக வைக்கிறான். இப்படி, பிறபாத்திரங்களைக் காட்டிலும் சகுனி தருமனின் நிறைகளையும், குறைகளையும் நன்கு அறிந்துள்ளான். தருமனின் இயல்பில் பலவீனம் எது என்பதை உணர்ந்து, அதற்கேற்றவாறு செயல்பட்டு வெற்றியும் பெறுகிறான். இவ்வாறு ஒவ்வொரு கதாபாத்திரமும் சிறப்பும், முரணும், பிழையுமின்றி அமையும் வகையில் பாரதி முழுமையாக அமைந்திருத்தலால்தான், பாஞ்சாலி சபதம் சிறந்த இலக்கியக் காப்பியமாகவும் நாடகக் காப்பியமாகவும் திகழ்கிறது.

**பாஞ்சாலி சபதமும் உள்ளுறையும்**

பாஞ்சாலியைப் பணயமாக வைத்தால் அனைத்தையும் மீட்கலாம் என்றான் சகுனி. இதற்கு தருமன் உடன்பட்டான். இது பாரதிக்குப் பொறுக்கவில்லை. பாஞ்சாலியின் பெருமைகள் அனைத்தும் அவர் உள்ளத்தில் எழுந்தன.

**அவன் பாஞ்சால நாட்டின் தவப்பயன்**
**ஆவியிலினியவள் ஓவிய நிகர்த்தவள்**
**தேவி, நிலந்திரு, திரவியம், தெய்வீக**
**மலர்க்கொடி, மின்னுரு, பேரழகு**

 ISBN 978-93-5288-634-0

இவ்வாறு கவிஞர் பாஞ்சாலியின் புகழினைச் சிறப்புறக் கூறி இத்தகுபெண்மையின் பெரும் விளக்கத்தைத் தருமன் பணயமாக வைத்து விட்டானே என்று உள்ளம் உருகுகிறார்.

அடுத்து அவர் நெஞ்சம் கொதிப்பெய்துகிறது. பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்பதை அறிந்த பாரதியார் அப்படிப்பட்ட தேவியைப் பணயமாக வைத்த இழிசெயலைப் பல இழிந்த உவமைகளால் விளக்குகிறார். வேள்விப் பொருளை நாயின்முன் உண்ண வைப்பதுபோலவும், பொன் மாளிகையில் பேயினைக் குடியேற்றல் போலவும், ஆளைவிற்று வாங்கிய பொன்னைக் கொண்டு செய்த அணிகலனை ஓர் ஆந்தைக்குப் பூட்டுதல் போலவும் தருமன் தன் உயிர்தேவியைக் கீழ்மக்கட்கு ஆளாக்கினான் என்கிறார். மேலும் செருப்புக்குத்தோல் வேண்டச் செல்வக் குழந்தையைக் கொல்வரோ? என்றும் விரும்பிய சூதினுக்கு ஒத்தபந்தயம் மெய்த்தவப் பாஞ்சாலியோ? என்றும் மனம்பதைத்துக் கேட்கிறார்.

**சபையில் பாஞ்சாலியின் வேண்டுகோள்**

துரியோதனன் ஆணைப்படி இழிந்த பண்புகளுடைய துச்சாதனன் பாஞ்சாலியை அரசவைக்கு அழைத்து வருகிறான். அங்கு அநீதியைத் தடுக்கும் திறனின்றி விதுரன் அமர்ந்துள்ளான் மற்றும் சான்றோர்களும் உள்ளனர் அந்த அவையில் பாஞ்சாலி பின்வருமாறு பதிலுரைக்கிறாள்.

தருமநெறியை மிக நன்றாக எடுத்துக் கூறியதாகப் பாஞ்சாலி வீடுமனுக்குக் குத்தலாக உரைத்தாள். இராவணன், சீதையைக் கவர்ந்து சிறை வைத்ததை அவன்தன் அமைச்சர்களும் நூல் வல்லோர்களும் ஆதரித்துப் பேசியதைச் சான்றாகக் காட்டி.

“பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்” என்றாள். வஞ்சனை சிறிதும் உணராத தன் கணவன் தருமனை வஞ்சனையால் வற்புறுத்திச் சூதாடச் செய்தது நேர்மையாகாது என்றும், இது முன்பே சிந்தித்துச் செய்த சூழ்ச்சி என்றும் எடுத்துரைத்தாள். மேலும் அவள் சபையோரை நோக்கி,

**பெண்டிர் தமையுடையீர்**
**பெண்களுடன் பிறந்தீர்**
**கண்பார்க்க வேண்டும்**

என்று சொல்லிக் கையெடுத்துக் கும்பிட்டாள். சீற்றமடைந்த வீமனுக்கு விசயன் ஆறுதல் மொழி கூறுகின்றான். துச்சாதனன் பாஞ்சாலியின் துகிலுரிய கண்ணன் அருள்புரிகந்தான்.

தருமன், சகுனி சூழ்ச்சியினால் தன் பொருள், நாடு, தம்பியர் மற்றும் தன்னையே பணயமாக வைக்கிறான். இச்செயல், இந்திய நாட்டு அரசர்கள் முதலில் முகலாயரிடமும் பின்பு ஆங்கிலேயரிடமும் தம் நாடுகளைப் படிப்படியாக இழந்ததைக் காட்டுகிறது. தருமன் முடிவில் பாஞ்சாலியைப் பணயமாக வைத்து இழந்து ஆங்கிலேயர் சூழ்ச்சியால் பாரதநாடு முழுமையும் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டதை உட்பொருளாக உணர்த்துகிறது.

பாஞ்சாலியைப் பணயம் வைத்தது, பாரத நாட்டின் பெருமைகள், பண்பாட்டின் சிறப்புகள் அனைத்தையும் உட்பொருளாகக் குறிப்பதாகும்.

வீட்டுமனின் உரை, அக்காலக் காங்கிரசின் மிதவாதிகளின் போக்கினைக் குறிக்கிறது. கணவனைச் சூழ்ச்சிக்கு இரையாக்கி அழும் பாஞ்சாலியின் நிலை பாரதநாடு அடிமைத் தளையில் சிக்குண்டு படும் அவலநிலையைச் சுட்டுவது. அழுது துடிக்கும் வீமன் (பாஞ்சாலியின் நிலை) பொங்குவது பாரத நாட்டின் அடிமைத்தளையைத் தகத்தெறிதல் இயலும் என்ற தீவிரவாதிகளின் கொள்கைகளைக் குறிப்பாக உணர்த்துவதாகும்.

ISBN 978-93-5288-634-0

கட்டுண்டோம்! என்று அருச்சுனன், கூறுவது, காந்தீய இயக்கத்தின் மூலமாகநாடு விடுதலை அடையும் என்பதைக் குறிப்பதாகும். "சீவிக்குழல் முடிப்பேன்" என்ற பாஞ்சாலியின் கூற்று அடிமைத் தளையைக் கிள்ளி எறியும் வரை பாரத நாட்டு மக்கள் ஓய்ந்திருக்க மாட்டார்கள் என்பதைக் குறிப்பதாகும்.

| **பாத்திரம்** | **உருவகம்** |
|---|---|
| பாஞ்சாலி | பாரதநாடு |
| துரியோதனாதியர் | அந்நிய சக்தி |
| வீட்டுமன் | மிதவாதி |
| வீமன் | தீவிரவாதி |
| தருமன், அர்ச்சுனன் | காந்தியவாதி |

இவ்வாறு பாஞ்சாலி சபதத்தில் பாத்திரங்கள் உருவகமாக அமைகின்றன.

அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று உறுதிப் பொருட்களைக் குறிப்பிடுவனவாக காப்பியம் அமைய வேண்டும் என்பதற்கேற்ப அறக்கருத்துக்கள் நிறைந்த ஒரு காப்பியமாக திகழ்கிறது பாரதியின் பாஞ்சாலிசபதம்.

பேயாட்சி செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்றபடி, நாட்டுமன்னன் கொடுங்கோலனாகித் தருமத்தைக் குழிதோண்டி புதைத்துவிட்ட நிலையில், கணவன்மார்கள், தம் கடமைகளை மறந்துமானத்தைப் பறக்கவிட்டுப் பேடிகளாய்த் தலைகவிழ்ந்து கிடந்த நிலையில், ஊமைகளாய் விலங்குகளாய் உலகம் முழுவதும் கைவிட்டாலும், இறைவனை அவனருளை, நம்பியவரைக் கைவிடாது என்ற அழியாத உண்மையை உணர்த்தும் பாஞ்சாலி சபதத்தில் தத்துவக் கருத்துகளும், அறக்கருத்துக்களும் மலிந்துள்ளன.